1979 மார்ச் 8]

திரு. ஏ, ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே வாயு என்று போட்டிருக்கிறது. வாயு என்றால், காற்று என்றுதான் நாங்கள் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். அமைச்சர் அவர்கள் காஸ் என்று சொல்கிறார்கள். தமிழில் மொழிபெயர்க்கும்போது இதையெல்லாம் பார்த்து மொழிபெயர்க்கவேண்டும். தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 60 கோடி ரூபாய் செலவில் கொண்டுவரப்படும் என்றார், 60 கோடி ரூபாய் செலவில் என்றால் எவ்வளவு மின் உற்பத்தி செய்ய இயலும். அது சாத்தியமானதா என்று முடிவெடுக்கப்பட்டதா, அது சாத்தியமானது எனறால், அதை சின்ன அளவிலே சிறு சிறு தொழிலாளர்கள் தங்கள் தேவைக்கான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்யக்கூடிய அளவில் இருக்கிறதா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, காஸ் என்றால் வாயு என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஏர் என்றால் காற்று என்றுதான் மொழிபெயர்க்கப்படும். ஆகவே இதில் தவறு ஒன்றும் இல்லை.

இந்த காஸ் மின்சார உற்பத்தியில் செலவு அதிகம். ஆனால், இப்பொழுது தொழில் நிறுவனங்களுக்கு உச்ச நேரங்களில் போதுமான அளவுக்கு மின்சாரத்தை வழங்க முடியவில்லை; அதனால் peak hour restriction உச்ச நேர மின்வெட்டு உள்ளது. இதைக் கொண்டு வந்தால் peak hour restriction இல்லாமல் செய்யலாம்.

3 Nos., ... 3 Units of Generator each unit consisting of 2X25 M.W. Gas Turbines.

ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்டது.

வாசுதேவநல்லூர் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண். 279—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில் மத்திய அரசின் கிராம மின் இணைப்புக்கழகம் (R.E.C.) பம்பு செட் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க நிதியுதவியும் அனுமதியும் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) வேலை எப்போது தொடங்கும்? எப்போது முடிவடையும்?

[1979 மார்ச் 8

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) and (ஆ) : ரூ. 49·232 இலட்சம் ரூபாயில் கடன் வழங்க ஏற்றுக்கொண்டுள்ளது.

(இ) வேலை 1978—79-ல் தொடங்கப்பட்டது. 1981—82-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் எத்தனை இடங்களில் மின் இணைப்புக் கழகம் மின் பம்பு செட்டு கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக உதவியிருக்கிறது. இதை கொடுக்க எந்த முறை பனன்படுத்தப்படுகிறது ? மனுக்களின் சீனியாரிட்டி அடிப்படையில கொடுக்கப்படுகிறதா, அல்லது ஒவ்வொரு ஏரியாவாக முடித்து விட்டு அடுத்ததற்கு வருகிறதா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் பகுதியில் ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு செய்யவேண்டும் என்பதற்காக மத்திய அரசின் மின் இணைப்புக் கழகம் கடன் உதவி அளித்தது. அந்த அடிப்படையில் இந்த ஆயிரம் பேர்களிடமும் மனுக்கள் வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 250 மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் 1980—81-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 9—10.]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, முன்னுரிமை வழங்குவது மனுக்களின் சீனியாரிட்டி அடிப்படையிலா அல்லது ஒவ்வொரு ஏரியாவாக முடித்துக்கொண்டு வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு 3 மாதங்களுக்குள் அதாவது 90 நாளைக்குள் பம்ப்செட் வாங்கி பிட்-அப் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலையில் வாங்க முடியாது. ஆகவே, காலக்கெடுவை நீட்டிப்பதற்கு அரசாங்கம் ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 90 நாளைக்குள் பிட்-அப் செய்ய வேண்டும் என்று இருப்பதை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும். ஆர். இ. சி. ஸ்கீம் என்பது ஒவ்வொரு பகுதியாக எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதியில் வரும் மனுக்கள் முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

(சில உறுப்பினர்கள் கை உயர்த்தினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வாசுதேவநல்லூர் பகுதியைப் பற்றிய கேள்வி.

கூடுதாளைக்கு சாலை வசதி.

*வினா எண் 280— திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் உள்ள கூடுதாளையை குமரி-திருச்செந்தூர் சாலையுடன் இணைப்பது குறித்த திட்டம் மீனளத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த கூடுதாளை சாலை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் நேரில் கண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, அதை கவனத்தில் கொண்டு அந்தச் சாலையை மீனவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்தச் சாலை கன்னியாகுமரி-ராமேஸ்வரம் சாலையின் இணைப்புச் சாலையாகும். ஏற்கனவே 1·5 கிலோ மீட்டர் தொலைவு நீளம் அந்தச் சாலை தார் சாலையாக அமைந்து இருக்கிறது என்றாலும் அது மிகவும் பழுதடைந்து இருப்பதை நானும் அறிவேன். என்றாலும், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற கடலோரப் பகுதியில் இருக்கும் மீனவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு குடிநீர் வசதி, எந்தெந்தப் பகுதியில் இருக்கிறது, எந்த எந்தப் பகுதியில் இல்லை, சாலை வசதி எந்தெந்தப் பகுதியில் இருக்கிறது, எந்தெந்தப் பகுதியில் இல்லை என்பதைப் பற்றிய தகவல்களை இந்த அரசு சேகரித்துக்கொண்டு வருகிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் கிடைத்தவுடன், அதற்கென தனியாக திட்டம் தீட்டி, அந்தக் கிராமங்களுக்குப் போதுமான